Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 237 உள்ளூர் - 25.08.2026 செவ்வாய்க்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 237 வெளியூர் - 26.08.2026 புதன்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

உங்கள் பிறந்த தேதி சொல்லும் செல்வ ரகசியம்!

UPSC மூலம் 80 காலியிடங்கள்!

வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம்!

தவெகவில் பிரபல மலையாள நடிகர்?



தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தலைமைச் செயலகத்தில், மாநகர் போக்குவரத்துக் கழகம் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 290 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் 250 புதிய பேருந்துகளின் சேவையைப் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஆ.விஜய் தமிழன் பார்த்திபன், தலைமைச் செயலாளர் மு.சாய்குமார், போக்குவரத்துத் துறை செயலாளர் இல.நிர்மல்ராஜ், சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# விஜயகாந்த் பிறந்தநாள்: முதல்வர் விஜய் வாழ்த்து!

சென்னை, ஆக. 25–

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ச. ஜோசப் விஜய் அவர்களின் சமூக வலைதளப் பதிவு:–



மனிதநேயம், துணிச்சல், தன்னலமற்ற சேவை ஆகியவற்றை அடையாளமாகக் கொண்ட தமிழ்நாடு சட்டமன்ற முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் பிறந்தநாளில் அவருக்கு எனது புகழ் வணக்கங்களைச் செலுத்துகிறேன்.

திரைத்துறையில் தனக்கெனத் தனி முத்திரை பதித்ததோடு, அரசியலில் மக்கள் நலனை முன்னிறுத்திய தலைவராகவும் திகழ்ந்து, ஏழை, எளிய மக்களின் மீது அன்பும், அக்கறையும் கொண்டு கொடையுள்ளத்தோடு உதவிய புரட்சிக் கலைஞரின் புகழ் என்றும் நிலைத்தோங்கட்டும்!

# ஜி ஸ்கொயர் மாப்பிள்ளை- லாட்டரி மருமகன்: காரசார விவாதத்தை ஏற்படுத்திய பரந்தூர் ஏர்போர்ட் விவகாரம்!

சென்னை, ஆக. 25–

தமிழக சட்டசபையில் இன்றைய மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் பரந்தூர் விமான நிலையம் ரத்து விவகாரம் பெரும் காரசார விவாதத்தை ஏற்படுத்தியது. தமிழ்நாடு சட்டசபை கூட்டத்தொடர் தொடங்கியது. மானியக்கோரிக்கை மீதான விவாதத்தில் தி.மு.க. எம்.எல்.ஏ.ஆஸ்டின் பேசுகையில்,



நாகர்கோவிலில் மிகவும் சிரமப்பட்டு இடம் தேர்வு செய்தோம், அடிக்கல் நாட்டி 6 மாதமாகியும் பணி தொடங்கவில்லை. த.வெ.க. அரசு நடத்திய முதலீட்டாளர்கள் மாநாட்டில் புதிதாக எத்தனை நிறுவனங்களுடன் ஒப்பந்தம் போடப்பட்டது?. தொழில்துறை வளர்ச்சி தான் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம், திமுக ஆட்சியில் தொழில்துறை முதலிடத்தில் இருந்தது. பரந்தூர் விமான நிலையம் திட்டத்தை ரத்து செய்துள்ளீர், முதலீட்டாளர்களை பாதிக்கும் என பேசினார்.

இதுதொடர்பாக அமைச்சர் ஆதவ் அர்ஜூனா பேசுகையில்,

பரந்தூர் விமான நிலையமா அல்லது விவசாயிகள் கண்ணீரா என்றால் எங்கள் தலைவர், முதலமைச்சர் விஜய் விவசாயிகள் பக்கம்தான் நிற்பார். முதலமைச்சர் நேற்று சொன்னார், விமான நிலையத்திற்கான இடம் கூடிய விரைவில் அறிவிக்கப்படும் என்று. எங்களுடைய தலைவரின் முதல் பிரசாரம், காலடி பட்டது விவசாயிகளின் கண்ணீருக்காக. விவசாயத்திற்காக குரல் கொடுப்போம், டெல்டாவில் பிறந்தவர்கள் நாங்கள் என சொல்லக்கூடியவர்கள் பரந்தூர் விவசாயிகளுக்கு எதிராக, பரந்தூர் மட்டுமல்ல திருவண்ணாமலையில் மேல்மா விவசாயிகளுக்கு எதிராக குண்டர் சட்டம் போட்டது தி.மு.க. தமிழ்நாட்டில் உள்ள 381 ஏரிகள் குறித்தும், மக்களுடைய குரலுக்கு பேசியது இல்லை. நேற்றே தெளிவா சொல்லியாச்சு, சென்னை விமான நிலையத்தின் இன்றைய பங்கு என்ன? அதை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதற்கான அரசின் நிலைப்பாடு என்ன? என்பது குறித்து சொல்லியாச்சு.

ஆனால் நேற்றில் இருந்து தி.மு.க. இந்த விமான நிலையம் இல்லை என்றால் தமிழகத்தின் முதலீடே போய் விடும் என்று சொல்கிறார்கள். தொழில்துறை வளர்வதற்கு மிக முக்கிய காரணமாக சிங்கிள் விண்டோ சிஸ்டம் தான், அதை முதலமைச்சர் உருவாக்குவார். தொழில் முதலீடு வருவதற்கு ஊழல் இல்லாத கட்டமைப்பே தேவை. 381 ஏரிகள் மற்றும் விவசாயிகள் பக்கம் நிற்பதற்காக மட்டுமே பரந்தூர் விமான நிலைய திட்டம் ரத்து செய்யப்பட்டது. 5 வருடம் கழித்து வெள்ளை அறிக்கை வெளியிட நாங்கள் ரெடி. உங்களோட 10 மடங்கு பொருளாதார இங்கு வந்து இருக்கும். ஏன் என்றால் ஊழல் இல்லாத ஆட்சியே எங்கள் முதலமைச்சர் கொடுப்பார் என்றார்.

**அ.தி.மு.க. எம்.எல்.ஏ. எடப்பாடி பழனிசாமி**

பரந்தூர் விமான நிலைய திட்டத்தை முதலமைச்சர் ரத்து செய்துவிட்டார். அதற்கு எந்தவிதமான மாற்றுகருத்தும் கிடையாது. அதற்காக 5,740 ஏக்கர் நிலம் தேவைப்படுவதாக கூறி 90 சதவீத நிலம் கையகப்படுத்தி இழப்பீட்டு தொகையும் கொடுத்தாச்சு. கையப்படுத்திய நிலத்தை என்ன செய்யப்போகிறீர்கள்? விவசாயிகளுக்கு கொடுக்கப்போறீங்களா? என்பது குறித்து அரசின் விளக்கம் தேவை என்றார்.

அமைச்சர் நிர்மல்குமார் பேசுகையில்,

பரந்தூர் விமான நிலைய திட்டத்திற்கு மொத்தமாக 5,846 ஏக்கர் தேவைப்பட்டது. பட்டா நிலங்கள் 3,774. 3 போகம் விளைவிக்கக்கூடிய விவசாய நிலங்கள் 2,681 ஏக்கர் விவசாய நிலங்கள் இருந்தது. 90 சதவீதம் நிலம் கையகப்படுத்தப்படவில்லை. 48 சதவீதம் அதாவது 1,202 ஏக்கர் நிலங்கள் மட்டும் தான் கையகப்பட்டுத்தப்பட்டு உள்ளது. சுற்றுச்சூழல் அனுமதி வாங்கியதாக தவறான தகவல் சொல்லப்படுகிறது. ஜி ஸ்கொயர் மாப்பிள்ளைக்காக பரந்தூர் பகுதிகளில் நிலத்தை வாங்கிக்குவித்தவர்கள், கருப்பு பணம் சேர்த்தவர்கள் மட்டுமே திட்டத்தை எதிர்க்கின்றனர் என்றார்.

ஜி ஸ்கொயர் மாப்பிள்ளை என அமைச்சர் நிர்மல்குமார் பேசியதற்கு தி.மு.க.வினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து, தி.மு.க. எம்.எல்.ஏ. தங்கம் தென்னரசு பேசுகையில், ஜி ஸ்கொயர் மாப்பிள்ளை என்று நீங்கள் சொல்கிறீர்கள் என்று சொன்னால், வேறு எந்த லாட்டரி மருமகனுக்காக புதிய விமான நிலையம் அமைக்க உள்ளீர்கள் என்று நான் கேட்கட்டுமா? என்றார். இதனால் அவையில் சலசலப்பு ஏற்பட்டது.

இதையடுத்து பேசிய தி.மு.க. எம்.எல்.ஏ. தங்கம் தென்னரசு, பல இடங்களில் ஆய்வு செய்த பிறகே பரந்தூர் பகுதியை தேர்வு செய்தோம். எந்த இடத்தில் அமைத்தாலும் அங்கும் விவசாய நிலங்கள் இருக்கும், அப்போது பிரச்சனை ஏற்படும். மக்களை இடமாற்றம் செய்யாமல் நிலத்தை கையகப்படுத்த முடியாது. சென்னை விமான நிலையத்தில் எப்படி 2–வது ரன்வே வரும்? என கேள்வி எழுப்பினார்.

இதையடுத்து பேசிய அமைச்சர் கீர்த்தனா, கையகப்படுத்தப்பட்ட நிலத்தை வைத்து மக்களை பாதிக்காத வகையில் திட்டம் தொடங்கப்படும். மத்திய அரசு அனுமதி அளித்தும் சென்னை விமான நிலையத்தை ஏன் விரிவாக்கம் செய்யவில்லை? என கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு அவையில் விவாதம் நடைபெற்றது.

## ஈரானுக்கு அமெரிக்காவின் ‘D-Day’!

# வர்த்தகம் தொடர்ந்தால் டாலர் ‘கட்’! இந்தியாவுக்கு எண்ணெய் விலை ஷாக்!

## தங்கம், கப்பல், டெக்குக்கும் செக்!!

வாஷிங்டன், ஆக. 25–

அமெரிக்கா – ஈரான் மத்தியிலான ராணுவ போர் தற்போது வர்த்தக போராக மாறியுள்ளது, ஈரான் நாட்டை உலக நாடுகளிடம் இருந்து தனிமைப்படுத்தும் விதமாக டிரம்ப் அரசு Economic D–Day பெயரில் நடவடிக்கைகள் எடுக்க உள்ளதாக அறிவித்துள்ளது.




அமெரிக்க கருவூலச் செயலர் ஸ்காட் பெசன்ட் நேற்று நடந்திய முக்கியமான செய்தியாளர் சந்திப்பில் பேசிய போது ஈரான் உடன் வர்த்தகம், நிதி பரிமாற்றம் மற்றும் அந்நாட்டிற்கு உதவும் நாடுகளுக்கு கடைசி எச்சரிக்கை என தெரிவித்தார். அமெரிக்க அரசு கனடா மீதான 50 சதவீத வரியை விதித்துள்ளதை தொடர்ந்து ஈரான் மீது டார்கெட் செய்யப்பட்டு உள்ளது.

அமெரிக்கா கடந்த சில வாரங்களாக ராணுவ தாக்குதலை நிறுத்திவிட்டு மீண்டும்.. வரி, வர்த்தக கட்டுப்பாடு, நிதி சேவை முடக்கம் என வழியில் இறங்கியுள்ளது. இதன் நீட்சியாக ஈரான் உடனான அமெரிக்காவின் போர் 6 மாதங்களை எட்டியுள்ள நிலையில், இனி ஈரானுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் மற்றும் நிறுவனங்கள் மீது இரண்டாம் நிலை தடைகளையும், கட்டுப்பாடுகளையும் விரிவுபடுத்த உள்ளதாக அறிவித்துள்ளது. இதில் முக்கியமாக ஸ்காட் பெசென்ட் உலக நாடுகளுக்கு விடுத்த எச்சரிக்கையில், உலக நாடுகள் ஈரானுடன் வர்த்தக உறவை உடனே துண்டிக்க வேண்டும், இல்லையெனில் டாலர் அடிப்படையிலான நிதி அமைப்பில் இருந்து அந்த நாடு அல்லது நிறுவனம் மொத்தமாக துண்டிக்கப்படும் என இறுதி எச்சரிக்கை விடுத்தார். இந்த அறிவிப்பின் மூலம் ஈரானின் அனைத்து வர்த்தக, நிதி ஆதார வழிகளை முடக்க அமெரிக்கா முயற்சி செய்கிறது. சரி இதனால் இந்தியாவுக்கு எத்தகைய பாதிப்பு ஏற்படும் என்பது தான் தற்போதைய முக்கியமான கேள்வியாக உள்ளது. மேலும் அமெரிக்க கருவூல அமைப்பு தற்போது ஈரான் அமைப்பு கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கும், நிதி பரிமாற்றத்திற்கும் பயன்படுத்தும் அனைத்து நெட்வொர்க்கையும் தனது கண்காணிப்பில் வைத்துள்ளது. இதேபோல் ஈரான் தனது பொருளாதாரத்தை மேம்படுத்த பயன்படுத்தும் 5 துறைகளான டிஜிட்டல் சொத்துக்கள், டெக்னாலஜி, தங்கம், ஏவியேஷன், ஷிப்பிங் போன்ற துறைகளை முழு கண்காணிப்பில் வைக்க முடிவு செய்துள்ளது. இதன் மூலம் இந்தியாவுக்கு எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்ற கேள்வி எழுந்துள்ளது..?

1. கச்சா எண்ணெய் விலை ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் நீரிணை வழியாக கச்சா எண்ணெய் மற்றும் மூலப்பொருள் கப்பல் போக்குவரத்து இன்னும் இயல்பு நிலைக்கு திரும்பாத நிலையில், மறைமுகமாக சந்தைக்கு வரும் ஈரான் கச்சா எண்ணெய்யும் அமெரிக்காவின் இத்தடையால் பாதிக்கப்படும் பட்சத்தில் கச்சா எண்ணெய் விலை உயர்வது தொடரும். இந்தியா பல வழியில் மறைமுகமாக ஈரானில் இருந்து எரிபொருள், எரிவாயு வாங்கியது குறிப்பிடத்தக்கது. இதை உடனடியாக நிறுத்த வேண்டிய கட்டாயம் தொடரும்.

2. இந்திய நிறுவனங்களுக்கு செக் ஈரானுடன் நேரடியாகவோ மறைமுகமாகவோ வர்த்தகம் செய்யும் இந்திய நிறுவனங்கள் இனி வரும் காலக்கட்டத்தில் வர்த்தகத்தை நிறுத்த வேண்டும் இல்லையெனில் அமெரிக்காவின் 2ஆம் நிலை தடைகளை எதிர்கொள்ள வேண்டும். இதில் முக்கியமாக டாலர் அடிப்படையிலான வர்த்தகத்தை செய்யவதில் இருந்து அந்த நிறுவனங்கள் தடை செய்யப்படும்.

3. தங்கம் அமெரிக்கா ஈரான் மீதான கட்டுப்பாட்டில் தங்கத்தையும் கொண்டு வந்துள்ளது, இதனால் ஈரானிடம் இருக்கும் தங்கத்தை உலக சந்தையில் விற்க முடியாது. இதைவிட முக்கியமாக ஈரான் தொடர்புடைய வர்த்தகத்தில்ல தங்கத்தை பேமெண்ட் ஆகவும் பயன்படுத்த முடியாத நிலை உருவாகியுள்ளது.

4. இந்தியாவின் டெக் மற்றும் டிஜிட்டல் துறை டிஜிட்டல் சொத்துகள் (Digital Assets), தொழில்நுட்பம் (Tech–nology), விமான போக்குவரத்து (Avi–ation), கப்பல் போக்குவரத்து (Shipping) ஆகிய துறைகளும் அமெரிக்க கண்காணிப்புக்குள் வந்துள்ளன. இதனால் இந்த துறைகளில் செயல்படும் இந்திய நிறுவனங்கள், ஈரான் தொடர்புகள் இருந்தால் கூடுதல் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும்.

5. கப்பல் போக்குவரத்து அமெரிக்காவின் 2ஆம் நிலை தடைகள் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியில் இயக்கப்படும் கப்பல்களுக்கான கட்டணம், காப்பீட்டு கட்டணம் உயர வாய்ப்பு உள்ளது. இதனால் இந்தியாவுக்கான இறக்குமதி செலவுகள் அதிகரிக்க வாய்ப்புள்ளது. சீனா தான் சிம்மசொப்பனம் பல ஆண்டுகளாக ஈரானின் மிகப்பெரிய கச்சா எண்ணெய் கொள்முதல் நாடாக சீனா உள்ளது.

இத்தகைய நிலையில் அமெரிக்காவின் 2ஆம் நிலை தடைகளை சீனா எப்படி எதிர்கொள்ள போகிறது, இதேபோல் அமெரிக்காவும் சீனா மீது எத்தகைய வரி மற்றும் தடைகளை விதிக்கும் என்பது தான் தற்போது கவனிக்க வேண்டியவிஷயமாக உள்ளது. இறுதியாக அமெரிக்காவின் இந்த தடைகள் இந்தியாவை நேரடியாக பாதிக்காது. காரணம்:

இந்தியா – ஈரான் மத்தியிலான வர்த்தகம் என்பது கடந்த 5 வருடத்தில் 1.6 – 2.35 பில்லியன் டாலர் அளவில் மட்டுமே உள்ளது. 2022–23ஆம் நிதியாண்டில் அதிகப்படியான வர்த்தகம் பதிவாகியுள்ளது. இரு நாடுகள் மத்தியிலான வர்த்தகத்தில் இந்தியா தான் உபரி ஏற்றுமதி கொண்ட நாடாக உள்ளது. அமெரிக்காவில் இத்தடை காரணமாக ஈரானுக்கான இந்தியாவின் ஏற்றுமதி பாதிக்க கூடும்.

# ஆசிரியர் தகுதித்தேர்வு; சட்டசபையில் அரசினர் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றம்!

சென்னை, ஆக. 25–

ஆசிரியர் தகுதித் தேர்வு தொடர்பாக சட்டசபையில் தனித் தீர்மானத்தை பள்ளிக்கல்வி த்துறை அமைச்சர் ராஜ்மோகன் கொண்டு வந்தார். 2010 ஆகஸ்ட் 23–ம் தேதிக்கு முன்பாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு டெட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கக் கோரி தீர்மானம் கொண்டு வரப்பட்டது.



இதுகுறித்து அமைச்சர் ராஜ்மோகன் பேசியதாவது:–

கட்டாய டெட் தேர்வு தேர்ச்சி என்ற உத்தரவால் 3.28 லட்சம் ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2010 ஆகஸ்ட் 23க்கு முன்பாக நியமனம் செய்யப்பட்ட ஆசியர்களுக்கு டெட் தேர்வில் இருந்து முழுமையான விலக்கு வேண்டும்; இதற்கு மத்திய அரசு கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் உரிய திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என கூறினார்.

அரசின் தனித் தீர்மானத்துக்கு திமுக, அதிமுக, பாமக, இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், காங்கிரஸ், உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு தெரிவித்தன.

இதனையடுத்து அரசின் தனித் தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகர் அறிவித்தார்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 25.08.2026
விசுவாவசு தமிழ் வருடம்
ஆவணி மாதம் 08-ம் தேதி

## AI வந்தது... வேலை போகவில்லை!




செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தால் வேலைவாய்ப்புகள் பறிபோகும் என்ற அச்சம் நிலவி வரும் நிலையில், இந்தியாவுக்கு AI மூலம் புதிய வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாக நோமுரா அறிக்கைதெரிவித்துள்ளது.

2022 முதல் 2026 ஆகஸ்ட் வரை ஆசியாவில் AI மூலம் 1.31 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ள நிலையில், 61 ஆயிரம் வேலைகள் மட்டுமே பறிபோயுள்ளன.

இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸ் நாடுகளில் AI தொடர்பான வேலைவாய்ப்புகள் அதிகரித்துள்ளன.


ஆனால், புதிய பட்டதாரிகளுக்கு சிக்கல்! நிறுவனங்கள் அனுபவமிக்க ஊழியர்களை அதிகம் விரும்புவதால், தொடக்கநிலை வேலைவாய்ப்புகள் குறைந்து வருகின்றன. 55% IT நிறுவனங்கள் Entry–Level பணியாளர்கள் சேர்க்கையை குறைத்துள்ளதாக ICRIER ஆய்வு தெரிவித்துள்ளது.

இதனை 'Silent Firing' என நோமுரா குறிப்பிடுகிறது. அதேவேளையில், உற்பத்தி, கட்டுமானம், மருத்துவம், கல்வி போன்ற மனித உழைப்பு அதிகம் தேவைப்படும் துறைகளில் AI காரணமாக வேலை இழப்பு குறைவாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலைகளை AI மாற்றுகிறது... அதே நேரத்தில் புதிய வேலைகளையும் உருவாக்குகிறது!

## சினிமா துளிகள்..!

### த்ரிஷா நடிக்கும் புதிய வெப் தொடர்!



தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையான த்ரிஷா, தற்போது வெப் தொடர் ஒன்றில் நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இயக்குநர் நந்தினி ரெட்டி இயக்கும் இந்தத் தொடர், சூப்பர் நேச்சுரல் த்ரில்லர் கதைக்களத்தில் உருவாகவுள்ளதாக கூறப்படுகிறது. மேலும், கதை முழுவதும் த்ரிஷாவின் கதாபாத்திரத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

### ஓணம் வெளியீட்டில் பிருத்விராஜை 3-வது முறையாக வென்ற நிவின் பாலி!



நடிகர் நிவின் பாலியின் பெத்லகேம் குடும்ப யூனிட் வெற்றியை நோக்கி சென்றுள்ளது.

இந்தாண்டு ஓணத்திற்கு நடிகர் பிருத்விராஜ் நடிப்பில் உருவான கலீஃபா, நிவின் பாலி நடித்த பெத்லகேம் குடும்ப யூனிட் ஆகிய படங்கள் வெளியாகின.

இதில், பிருத்விராஜின் கலீஃபா திரைப்படம் கலவையான விமர்சனங்களைப் பெற்றுள்ளது. ஆனால், வணிக ரீதியாக ரூ. 30 கோடி வரை வசூலித்துள்ளது. மேலும், நடிகர் நிவின் பாலியின் பெத்லகேம் குடும்ப யூனிட் நல்ல வரவேற்பைப் பெற்று வெற்றியை நோக்கி நகர்ந்துள்ளது. இதனால், இந்த ஓணம் வெளியீட்டில் நிவின் பாலியே முன்னணியில் உள்ளார்.

முன்னதாக, 2017 ஆம் ஆண்டு ஓணத்தின் போது, நடிகர் பிருத்விராஜின் ஆடம் ஜோனும் நிவின் பாலியின் நண்டுகளுடே நாட்டில் ஒரிடவேள திரைப்படங்கள் வெளியாகின. அதில், நிவின் பாலியின் படமே வெற்றிப்படமானது.

தொடர்ந்து, 2019–ல் பிருத்விராஜ் நடித்த ப்ரதர்ஸ் டேவும் நிவின் பாலி நடித்த லவ் ஆக்ஷன் டிராமா ஆகிய திரைப்படங்கள் வெளியாகின. இதிலும், நிவின் பாலியின் படமே பிளாக்பஸ்டர் ஆக, பிருத்விராஜ் படம் தோல்விப்படமானது. இந்த வகையில், நிவின் பாலியே தொடர்ந்து ஓணம் வெற்றியைக் கொடுத்துள்ளார்.

## நெதன்யாகுவின் மகனை கொல்ல ஈரான் சதி? பரபரப்பு!




இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் மகன்களில் ஒருவரை ஈரான் கொலை செய்ய முயன்றதாகநெதன்யாகு பரபரப்பு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். ஆனால், எந்த மகன் குறிவைக்கப்பட்டார் என்பது இதுவரை தெளிவாகத் தெரியவில்லை.


இதற்கிடையே, இஸ்ரேல் தாக்குதலில் ஈரான் உச்சத் தலைவர் அலி காமெனி கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அவரது மகன் மொஜ்தாபா புதிய உச்சத் தலைவராக பொறுப்பேற்றார். அந்த தாக்குதலில் தனது தந்தை மட்டுமின்றி, மனைவி, சகோதரி, சகோதரியின் குழந்தை மற்றும் மைத்துனரையும் இழந்ததாக மொஜ்தாபா தெரிவித்துள்ளார். மேலும், தந்தையின் மரணத்திற்கு பழிவாங்குவதாகவும் அவர் சபதம் செய்திருந்தார்.

நெதன்யாகுவின் மூத்த மகன் யாயிர், 2024 முதல் அமெரிக்காவின் மியாமியில் வசித்து வருகிறார். அவருக்கு ஷின் பெட் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இதற்கான அரசு செலவு இஸ்ரேலில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், அக்டோபர் 27 தேர்தலில் நெதன்யாகுவை எதிர்கொள்ளும் முன்னாள் ராணுவத் தளபதி காடி ஐசன்கோட்டுக்கு முழுநேர பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் நெதன்யாகு வலியுறுத்தியுள்ளார்.

## ஐ.வி.எஃப். மூலம் உலகின் முதல் கன்று? அசாமில் புதிய சாதனை!

அசாம், ஆக. 25–



அசாமின் உள்ளூர் 'லக்கிமி' இனப் பசு, IVF (In Vitro Fertilisation) முறையில் பெண் கன்றை ஈன்றுள்ளது. இந்த இனத்தில் IVF மூலம் கன்று பிறப்பது இதுவே முதல் முறை என்றும், உலகிலேயே IVF முறையில் பிறந்த முதல் கன்றாக இருக்கலாம் என்றும் அசாம் அரசு தெரிவித்துள்ளது.

இந்த தொழில்நுட்பம் மூலம்:

உள்ளூர் கால்நடை இனங்களைப் பாதுகாக்கலாம்

பால் உற்பத்தியை அதிகரிக்கலாம்

நோய்களைக் கட்டுப்படுத்த உதவும்

விவசாயிகளின் வருமானத்தை உயர்த்த வாய்ப்பு உள்ளது

செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "உலகின் முதல் IVF கன்று" என்ற கூற்று உறுதி செய்யப்பட வேண்டிய ஒன்று; "இருக்கலாம்" என்றே செய்தி குறிப்பிடுகிறது.

## லோகோ பைலட்டுகளுக்கு நிம்மதி!

புதுடெல்லி, ஆக. 25–



இந்திய ரயில்வேயின் அதிதிறன் கொண்ட 12,000 HP மின்சார என்ஜின்களில் 'Water–less Urinal' வசதி அறிமுகமாக உள்ளது. லோகோ பைலட்டுகள், குறிப்பாக பெண் ஓட்டுநர்கள், நீண்ட காலமாக எதிர்கொண்ட கழிப்பறை வசதியின்மைக்கு இது முக்கியத் தீர்வாக அமையும்.

பீகாரின் மதேபுராவில் இந்திய ரயில்வே ஆல்ஸ்டாம் கூட்டு முயற்சியான MELPL தயாரிக்கும் என்ஜின்களில் இந்த வசதி பொருத்தப்படுகிறது. இதற்கான மாதிரி என்ஜின் கடந்த 4 மாதங்களாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது.

புதிய என்ஜின்களில் கழிப்பறை வசதி தொழிற்சாலையிலேயே பொருத்தப்படும். ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள என்ஜின்களிலும் பின்னர் retrofit முறையில் பொருத்தப்பட உள்ளது. மணிக்கு 120 கி.மீ. வேகத்தில் 6,000 டன் சரக்குகளை இழுத்துச் செல்லும் திறன் கொண்ட இந்த என்ஜின்களில், இதுவரை 650 என்ஜின்கள் ரயில்வேயிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மார்ச் 2028–க்குள் 800 என்ஜின்களை வழங்க ₹33,000 கோடிக்கும் அதிக மதிப்பிலான ஒப்பந்தம் உள்ளது.

மேலும், பிப்ரவரி 2026 நிலவரப்படி 2,800–க்கும் மேற்பட்ட ரயில் என்ஜின்களில் கழிப்பறை வசதி ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## பாரதிராஜாவுக்கு தேனியில் ரூ.2.50 கோடியில் மணிமண்டபம்!

சென்னை, ஆக. 25–



இயக்குநர் இமயம் பாரதிராஜா கடந்த ஜூன் 10 ஆம் தேதி உடல்நலக்குறைவால் காலமானார். அவரது உடல் தேனியில் உள்ள பண்ணை வீட்டில் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. பாரதிராஜா அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் மணிமண்டபம் அமைக்க வேண்டும் என கவிஞர் வைரமுத்து முதல்வர் விஜய்க்கு கோரிக்கை விடுத்திருந்தார். இந்த கோரிக்கை தற்போது நிறைவேற்றப்பட்டுள்ளது. சட்டப்பேரவையில் நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, அமைச்சர் ராஜ்மோகன், தேனியில் ₹2.50 கோடி செலவில் பாரதிராஜாவுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என அறிவித்தார்.

இந்த அறிவிப்பு பாரதிராஜாவின் ரசிகர்கள், திரையுலகினர் மற்றும் அவரது குடும்பத்தினரிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## iPhone 18 Pro: செப்டம்பர் 9-ல் அறிமுகமா?




ஆப்பிளின் iPhone 18 Pro செப்டம்பர் 9–ல் அறிமுகமாகலாம் என தகவல் வெளியாகியுள்ளது. அதே நிகழ்வில் முதல் Foldable iPhone பற்றிய அறிவிப்பும் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்பதிவு: செப்டம்பர் 12 என எதிர்பார்ப்பு

iOS 27: செப்டம்பர் 14 முதல்

விற்பனை: செப்டம்பர் 18 முதல் இருக்கலாம்

தேதிகளை ஆப்பிள் நிறுவனம் இதுவரை அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்தவில்லை.


## தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் TNPSC Group-II, IIA போட்டித் தேர்விற்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்: கலெக்டர் தகவல்

திண்டுக்கல், ஆக. 25–

திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மைய தன்னார்வ பயிலும் வட்டம் மூலமாக அரசுப் பணிக்காலியிடங்களுக்கான போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் வேலைநாடுநர்களுக்கு இலவசப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் TNPSC Group–II, IIA போட்டித் தேர்விற்கான அறிவிப்பு 11.08.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது. மேற்காணும் போட்டித்தேர்வுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் வளாகத்தில் 25.08.2026 அன்று முதல் துவங்கப்படவுள்ளது. இப்பயிற்சி வகுப்பு திறன்மிக்க வல்லுநர்களைக் கொண்டு வகுப்புகள் நடத்தப்படவுள்ளன. மாதிரித் தேர்வுகளும் இலவசமாக நடத்தப்பட உள்ளன. மேலும் இப்போட்டித் தேர்விற்கான அனைத்து புத்தகங்களும் இவ்வலுவலக நூலகத்தில் உள்ளது. எனவே, போட்டித் தேர்விற்குத் தயாராகும் போட்டித்தேர்வு ஆர்வலர்கள் இந்த அரியவாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும், அவ்வாறு விருப்பமுள்ளவர்கள் இவ்வலுவலகத்தை நேரடியாக தொடர்பு கொண்டு தங்களது விவரங்களைப் பதிவு செய்து வகுப்பில் சேர்ந்து பயன்பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு 94990 55924 என்ற அலைபேசி எண் மற்றும் @DEC–GC_DINDIGUL என்ற Telegram சேனலில் இணைந்து பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.



## உங்கள் பிறந்த தேதி சொல்லும் செல்வ ரகசியம்!



ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்றும், நல்ல விதத்தில் செல்வ செழிப்பை அடைய வேண்டும் என்ற எண்ணம் இருக்கும். எண் கணிதத்தின் படி, செல்வத்தின் அதிபதியான லட்சுமி தேவியின் அடையாளமாக கருதப்படும் சில பொருட்களை உங்களுடைய பர்சில் வைப்பதன் மூலம், உங்களுக்கு நேர்மறையான ஆற்றல் அதிகரித்து, நிதி சிக்கலில் இருந்து விடுபடவும், பணம் சேர்ந்து அது பெருகக்கூடிய நல்ல சூழலும் ஏற்படும். உங்கள் பிறந்த தேதியின் அடிப்படையில் எந்தெந்தப் பொருட்களை வைத்திருப்பது சிறந்தது என்பதை இங்கே தெரிந்துகொள்வோம்.

**எண் 1 செல்வத்தையும் ஈர்க்கும் வழி**

1

எந்த ஒரு மாதத்திலும் 1, 10, 19 மற்றும் 28 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் எண்கணித உடல் எண் '1' ஆகும். இந்த எண்ணிற்குரிய அதிபதியை சூரிய பகவான் ஆவார். எனவே எண் 1–ஐச் சார்ந்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் செல்வம் சேர, உங்களுடைய செல்வம் பெருகவும் மகாலட்சுமி தேவியின் அடையாளமாக கருதப்படும், தங்க நாணயத்தை உங்களுடைய பர்சில் வைத்து இருப்பது நல்லது. இல்லையெனில் தங்க நிறத்திலான லட்சுமி தேவியின் புகைப்படத்தை வைத்திருப்பதன் மூலம் உங்களுடைய அதிர்ஷ்ட, வருமானமும் அதிகரிப்பதற்கான புதிய வழிகளை பெறுவீர்கள்.

**எண் 2 செல்வத்தையும் ஈர்க்கும் வழி**

எந்தவொரு மாதத்திலும் 2, 11, 20 மற்றும் 29 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு உடல் எண் '2' அமைகிறது. எண் 2–ன் அதிபதி சந்திர பகவான் ஆவார். எனவே இந்த எண்ணை சேர்ந்தவர்கள் தன்னுடைய

2

மன அமைதியை பேணுவதோடு, உணர்ச்சி வசப்படுவதை கட்டுப்படுத்துவது அவசியம். அதனால் இவர்கள் செல்வம் பெருகும் விஷயத்தில் நிதானமாகவும் ஆழமாகவும் சிந்திக்க வேண்டும். மேலும் தங்களுடைய பணப்பையில் ஒரு வெள்ளை யானையின் உருவத்தை வைத்திருப்பதன் மூலம், தங்களுடைய செயல்பாடுகளிலேயே பெருக்குவதற்கான புதிய வாய்ப்புகளை பெறுவார்கள்.

**எண் 3 செல்வத்தையும் ஈர்க்கும் வழி**

எந்தவொரு மாதத்திலும் 3, 12, 21 மற்றும் 30 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு

3

உடல் எண் '3' அமைகிறது; 3ம் எண்ணுக்குரிய அதிபதி குரு பகவான் ஆவார். அதனால் இந்த எண்ணை சேர்ந்தவர்கள் மஞ்சள் உடன் கலந்த அரிசியை தன்னுடைய பணப்பையில் வைத்திருப்பதன் மூலம், தங்களுடைய வருமானம் உயரும், செல்வம் அதிகரிப்பதற்கான வாய்ப்பும், ஒருபோதும் பண பற்றாக்குறை ஏற்படாது.

**எண் 4 செல்வத்தையும் ஈர்க்கும் வழி**

எந்தவொரு மாதத்திலும் 4, 13, 22 மற்றும்

4

31 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு உடல் எண் '4' அமைகிறது; இந்த எண்ணில் பிறந்தவர்களுக்கு அதிபதி நிழல் கிரகமான ராகு ஆவார். இவர்கள் எப்பொழுதும் தங்களுடைய பணப்பையில் (பர்சில்) ஒரு உலோகத்தால் ஆன ஆந்தை உருவத்தை வைத்திருப்பது மிகவும் நல்லது. ஆந்தை என்பது இருளுக்குப் பிறகு அறிவை பெறுவதை குறிக்கிறது. இதன் மூலமாக உங்களுக்கான செல்வம் ஈர்க்கப்படுவதோடு, நல்ல வாய்ப்புகளையும் வழங்கும்.

**எண் 5 செல்வத்தையும் ஈர்க்கும் வழி**

5

எந்தவொரு மாதத்திலும் 5, 14 மற்றும் 23 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களின் உடல் எண் 5 ஆகும்.இந்த எண்ணுக்குரிய கிரகம் புதன் பகவான். இவர் ஒருவருக்கு அறிவு, திறமையை தரக்கூடியவர். எண் 5–ஐச் சார்ந்தவர்கள், தங்களுடைய வாழ்க்கையில் அந்த அதிர்ஷ்டத்தையும், செல்வத்தையும் பெற விரும்பினால் ஒரு சிறிய அங்கே தங்களுடன் வைத்துக் கொள்வது நல்லது. சங்கு மகாலட்சுமியின் அம்சமாக, புனித அடையாளமாக கருதப்படுகிறது. அதை உங்களுடைய பணப்பையில் வைத்திருப்பதால் உங்களுடைய செல்வநிலை அதிகரிக்கும்.

**எண் 6 செல்வத்தையும் ஈர்க்கும் வழி**

எந்தவொரு மாதத்திலும் 6, 15 மற்றும் 24 ஆகிய தேதிகளில் பிறந்தவர்களுக்கு உடல் எண் 6–க்கு உரியவர்கள் ஆவர். இந்த எண்ணுக்குரிய அதிபதி சுக்கிர கிரகம் ஆகும். சுக்கிரனின் அருள் காரணமாக அன்பு மற்றும் அழகு போன்ற அடிப்படை விஷயங்கள் நிறைந்திருக்கும். தங்களுடைய வாழ்க்கையில் நிதி நிலையில் முன்னேற்றம்

6

அடைய வேண்டும் எனில், எண் 6–ஐச் சார்ந்தவர்கள் எப்போதும் ஒரு சிறிய 'ஸ்ரீ யந்திரத்தை' (Sri Yantra) தங்களுடன் வைத்திருப்பது மிகவும் நன்மை தரும். இது அவர்களுடைய வாழ்க்கையில் நேர்மறையான எண்ணங்களையும் செயல்படுகளையும் தரும்.

**எண் 7 செல்வத்தையும் ஈர்க்கும் வழி**

எந்தவொரு மாதத்திலும் 7, 16 மற்றும் 25 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் அவர்களின் உடல் எண் 7–க்கு உரியவர்கள் ஆவர். இந்த எண்ணுக்கு நிழல் கிரகங்களில் ஒன்றான கேது அதிபதியாக உள்ளார். கேடு கிரகமானது ஒருவருடைய அறிவையும் ஆன்மீகத்தையும் குறிக்கக்கூடியது..

7

எனவே 7ம் எண்ணை சார்ந்தவர்கள் தங்களுடன் ஒரு 'கோமதி சக்கரத்தை' (Gomati Chakra) எப்போதும் வைத்திருப்பது உங்களுடைய செல்வநிலையையும், மனதில் நம்பிக்கை அதிகரிக்கும்.

**எண் 8 செல்வத்தையும் ஈர்க்கும் வழி**

எந்த மாதத்திலும் 8, 17 மற்றும் 26 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் எண் 8–ன் சாதிக்கத்தை கொண்டவர்களாக இருப்பார்கள். சனி பகவான் என்ற எண்ணுக்குரிய அதிபதியாக இருக்கிறார்.

8

எனவே எண் 8 பிறந்தவர்கள் தங்களுடன் எப்பொழுதும் தாமரை விதைகளை வைத்திருப்பது நன்மைகளை தரும். குறிப்பாக தங்களுடைய பணப்பையில் சில விதைகளை வைத்திருப்பதால் அவர் செல்வநிலை பெருகும். மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**எண் 9 செல்வத்தையும் ஈர்க்கும் வழி**

எந்த மாதத்திலும் 9, 18 மற்றும் 27 ஆகிய தேதிகளில் பிறந்தவர்கள் எண் 9–ன் ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாக இருப்பார்கள். 9ம் என்னை சேர்ந்தவர்கள் செவ்வாய் கிரகத்தின் அருளை கொண்டவர்கள். இந்த கிரகமானது

9

துணிச்சல் மற்றும் வீரத்தையும் அடையாளமாக திகழ்கிறது. இவர்கள் லட்சுமி தேவியின் நல்லோர்களை வெற்றி பெறவும், எங்கள் வாழ்க்கையில் நிதிநிலை ரீதியாக முன்னேற்றத்தை பெற்றிட ஒரு சிறிய கழுதையின் புகைப்படத்தை தங்களுடன் வைத்திருப்பது மிகவும் நல்லது. இது உங்களுடைய மனதிற்கு வலிமை மற்றும் துணிச்சலை தரக்கூடியதாக இருக்கும். இதன் மூலம் வாழ்க்கையில் தாண்டி பணவரவு பெறுவீர்கள்.

**குறிப்பு:**

இங்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து ஜோதிடத் தகவல்களும் தீர்வுகளும் ஜோதிடம் மற்றும் ஆன்மீக நம்பிக்கைகளை அடிப்படையாகக் கொண்டவை. இதற்கு அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் எதுவும் இல்லை. இத்தகவல்களைக் கருத்தில் கொண்டு முழுமையான விவரங்களைப் பெற, தொடர்புடைய நிபுணரை அணுகுவது சிறந்தது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



# 30, 40 வயதிலேயே புற்றுநோய்? இளம் வயதினருக்கு எச்சரிக்கை!



இந்தியாவில் 30 மற்றும் 40 வயதினரிடையே புற்றுநோய் கண்டறியப்படுவது குறித்து கவனம் அதிகரித்து வருகிறது. உடல் பருமன், உடற்பயிற்சி இல்லாமை, ஆரோக்கியமற்ற உணவு, புகையிலை, மது, சுற்றுச்சூழல் காரணிகள் மற்றும் குடும்ப மரபணு காரணங்கள் அபாயத்தை அதிகரிக்கலாம்.

இளம் வயதினரிடம் மார்பக, தைராய்டு, வாய் மற்றும் நாக்கு புற்றுநோய்கள் குறிப்பிடத்தக்கதாக உள்ளன.

உடலில் கட்டி, காரணமற்ற ரத்தப்போக்கு, நீண்டகால இருமல், ஆறாத வாய்ப்புண், குடல் இயக்க மாற்றம், காரணமின்றி எடை குறைதல் போன்ற அறிகுறிகள் நீடித்தால் மருத்துவ ஆலோசனை பெறுவது அவசியம்.

புகையிலையைத் தவிர்த்து, உடல் எடையை கட்டுப்படுத்தி, உடற்பயிற்சி செய்து, ஆரோக்கியமான உணவைப் பின்பற்றுவது புற்றுநோய் அபாயத்தைக் குறைக்க உதவும்.

# 2 லட்சம் அமெரிக்க விசாக்கள் ரத்து?




அமெரிக்கா, ஆக.25–

அமெரிக்க அரசு சுமார் 2 லட்சம் B1, B2 விசாக்களை ரத்து செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. 2016 2026 காலகட்டத்தில் விசா பெற்று, பின்னர் அமெரிக்காவில் தஞ்சம் கோரியவர்களின் விசாக்கள் படிப்படியாக ரத்து செய்யப்படலாம்.

விசா ரத்து செய்யப்பட்டவுடன் உடனடியாக நாடு கடத்தப்பட மாட்டார்கள். ஆனால் அவர்களின் சுற்றுலா/வணிக விசா அந்தஸ்து நீக்கப்படும்.

குற்றச்செயல்கள், விதிமீறல்கள் மற்றும் விசா நிபந்தனைகளை தவறாக பயன்படுத்துவோரையும் அமெரிக்கா தீவிரமாக கண்காணித்து வருகிறது.

அமெரிக்கா செல்லும் இந்தியர்கள் விசா விதிமுறைகளை மிகுந்த கவனத்துடன் பின்பற்ற வேண்டும்.

# மிலாது நபி: டாஸ்மாக் கடைகள் மூடல்!



சென்னை, ஆக. 25–

மிலாது நபியை முன்னிட்டு நாளை தமிழகத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் கடைகளையும் மூட வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இது தொடர்பாக சென்னை மாவட்ட கலெக்டர் மாலதி ஹெலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மிலாது நபியை முன்னிட்டு சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து டாஸ்மாக் கடைகள் மற்றும் அதனைச் சார்ந்த பார்கள், எப்.எல்.2 உரிமம் கொண்ட பார்கள், எப்.எல்.3 உரிமம் கொண்ட ஓட்டல்களை சேர்ந்த பார்கள் மற்றும் எப்.எல்.3 (ஏ), எப்.எல்.3 (ஏ.ஏ.) முதல் எப்.எல்.11 வரை உரிமம் கொண்ட மதுபான விற்பனையகங்கள், மதுபான கூடங்கள் அனைத்தும் கண்டிப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும். மதுபானம் விற்பனை செய்யக்கூடாது என அறிவிக்கப்படுகிறது. தவறினால் மதுபானம் விற்பனை விதிகளின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# டெல்லியில் கனமழை: 15 விமானங்கள் ரத்து!

டெல்லி, ஆக. 25–

வட இந்தியாவில் தென்கிழக்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. அந்த வகையில் தலைநகர் டெல்லியில் நேற்று முதல் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

டெல்லி மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது. கனமழையால் வாகன ஓட்டிகள், பொதுமக்கள் அவதியடைந்துள்ளனர்.

அதேபோல், கனமழையால் டெல்லியில் விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது. கனமழையால் டெல்லியில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் 15 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. மேலும், 102 விமான சேவைகள் காலதாமதமாகியுள்ளன. இதனால் விமான சேவை பாதிக்கப்பட்டு பயணிகள் அவதியடைந்துள்ளனர். டெல்லியில் கனமழை இன்றும் தொடர்ந்து நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# 2029-ல் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’




புதுடெல்லி, ஆக. 25–

2029–ல் ‘ஒரே நாடு; ஒரே தேர்தல்’ திட்டம் அமலாக வாய்ப்பு இருப்பதால், தமிழகத்தில் த.வெ.க. அரசின் பதவிக்காலம் 3 ஆண்டுகளில் முடிவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

**நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதிகள் எத்தனை?**

இந்தியாவில் மொத்தம் உள்ள 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களில், 543 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளன. அதிகபட்சமாக உத்தரபிரதேசத்தில் 80 தொகுதிகளும், குறைவாக மிசோரம், நாகலாந்து, சிக்கிம், அந்தமான் – நிக்கோபார், சத்தீஷ்கர், லடாக், லட்சத்தீவு, புதுச்சேரி ஆகியவற்றில் தலா 1 தொகுதிகளும் உள்ளன. குறிப்பாக, தமிழ்நாட்டில் 39 தொகுதிகள் இருக்கின்றன.

இதேபோல், நாடு முழுவதும் 4,123 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. அதிகபட்சமாக உத்தரபிரதேசத்தில் 403 தொகுதிகளும், குறைந்தபட்சமாக புதுச்சேரி மற்றும் சிக்கிமில் தலா 32 தொகுதிகளும் உள்ளன. குறிப்பாக, தமிழகத்தில் 234 சட்டமன்ற தொகுதிகள் இருக்கின்றன.

**எதற்காக ஒரே நாடு; ஒரே தேர்தல்?**

நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் என்று ஒரேபோல் இருந்தாலும், நாடாளுமன்றத்திற்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தப்படுகிறது. ஆனால், 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களில் உள்ள சட்டமன்றங்களுக்கு, 5 ஆண்டு பதவிக்காலம் எப்போது முடிகிறதோ, அந்த நேரத்தில் சட்டசபை தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

இந்த நிலையில், தேர்தல் செலவுகளை குறைக்கவும், நிர்வாகத் திறனை மேம்படுத்தவும், தேர்தல் நடத்தை விதிகளால் மாநிலங்களில் வளர்ச்சித் திட்டப் பணிகள் பாதிக்கப்படுவதை தவிர்க்கவும் ஒரே நாடு; ஒரே தேர்தல் திட்டத்தை கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

**மத்திய அரசிடம் அறிக்கை சமர்ப்பிப்பு**

இதற்கான சாத்தியகூறுகள் குறித்து ஆராய, முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவினர் பல்வேறு தரப்பினரிடம் ஆலோசனை நடத்தி, அவர்கள் தெரிவித்த கருத்துகளை கொண்டு அறிக்கை தயாரித்து மத்திய அரசிடம் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து, கடந்த 2024–ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரில், ஒரே நாடு; ஒரே தேர்தல் திட்டத்தை கொண்டுவருவதற்கான, அரசியலமைப்பு 129–வது சட்டத்திருத்த மசோதாவை மக்களவையில் மத்திய அரசு அறிமுகப்படுத்தியது.

**பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை**

இது அரசியலமைப்பு திருத்த மசோதா என்பதால், மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு தேவை. எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு இடையே, இந்த மசோதா நாடாளுமன்ற கூட்டுக்குழுவுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. பா.ஜ.க. மக்களவை எம்.பி. பி.பி.சவுத்ரி இந்தக் கூட்டுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்தக் கூட்டுக் குழுவினர், சட்ட நிபுணர்கள், அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் முதல்–மந்திரிகள், அமைச்சர்கள், அரசியல் கட்சி தலைவர்கள் என பல்வேறு தரப்பினருடன் ஆலோசனை நடத்தினர்.

**நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் கூட்டம்**

இந்த நிலையில், ஒரே நாடு; ஒரே தேர்தல் திட்டத்தை ஆய்வு செய்யும் நாடாளுமன்ற கூட்டுக்குழுவின் கூட்டம் டெல்லியில் நேற்று நடைபெற்றது. குழுவின் தலைவர் பி.பி.சவுத்ரி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், காங்கிரஸ் எம்.பி.க்கள் ப.சிதம்பரம், பிரியங்கா உள்ளிட்டோர் கலந்துகொண்டு, “ஒரே நேரத்தில் நாடாளுமன்ற, மாநில சட்டமன்றங்களின் தேர்தலை நடத்துவது கூட்டாட்சி அமைப்புகளுக்கு எதிரானது. இந்த யோசனையை கைவிட வேண்டும்” என்று வலியுறுத்தினர்.

கூட்டம் முடிந்ததும், அதன் தலைவர் பி.பி.சவுத்ரி நிருபர்களிடம் கூறும்போது, “ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது தொடர்பாக, பல்வேறு தரப்பினருடன் பலமுறை ஆலோசித்து விட்டோம். அவர்களில், 99 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்துவிட்டனர். மற்றவர்களும் ஆதரவு தெரிவித்தால், இந்த திட்டத்தை 2029–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலிலேயே அமல்படுத்தலாம்” என்று கூறினார்.

ஒரே நாடு; ஒரே தேர்தல் திட்டத்தை 2029–ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் அறிமுகம் செய்தால், நடப்பு ஆண்டில் (2026) சட்டசபை தேர்தலை சந்தித்த தமிழ்நாடு, கேரளம், மேற்கு வங்காளம், அசாம் ஆகிய மாநிலங்கள், புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றில், ஆட்சியில் இருக்கும் கட்சிகளின் பதவிக்காலம் 3 ஆண்டுகளில் முடிந்துவிடும். அதாவது, தமிழகத்தில் த.வெ.க. அரசின் பதவிக்காலம் 3 ஆண்டுகளில் முடிந்துவிடும் ஆபத்து இருக்கிறது.


இதேபோல், அடுத்த ஆண்டு (2027) சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள உத்தரபிரதேசம், உத்தரகாண்ட், கோவா, குஜராத், மணிப்பூர், பஞ்சாப், இமாச்சலபிரதேசம் ஆகிய 7 மாநிலங்களில், ஆட்சிக்கு வருபவர்களின் பதவிக்காலம் 2 ஆண்டுகளில் முடிந்துவிடும்.

**பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் எதிர்க்கும்**

அதேபோல், 2028–ம் ஆண்டு சட்டசபை தேர்தலை எதிர்கொள்ளும் மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், கர்நாடகா, தெலுங்கானா, திரிபுரா, மேகாலயா, நாகலாந்து, மிசோரம் ஆகிய மாநிலங்களில் ஆட்சிக்கு வருபவர்களின் பதவிக்காலம் ஒரே ஆண்டில் முடிந்துவிடும்.

இதுபோன்று ஆபத்துகள் இருப்பதால், ஒரே நாடு; ஒரே தேர்தல் திட்டத்தை பா.ஜ.க. ஆட்சியில் அல்லாத மாநிலங்கள் எதிர்க்கும் என்றே தெரிகிறது. ஆனால், நாடு சுதந்திரம் பெற்ற பிறகு முதல் தேர்தல் நடைபெற்ற 1952–ம் ஆண்டு முதல் 1967–ம் ஆண்டு வரை நாடாளுமன்ற, மாநில சட்டமன்றங்களின் தேர்தல் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தவெகவில் பிரபல மலையாள நடிகர்?



திருவனந்தபுரம், ஆக. 25–

தமிழகத்தில் முதல்–அமைச்சர் விஜய் தலைமையிலான தவெக அரசின் ஆட்சி நடைபெற்று வருகிறது. இதனிடையே, கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற பிற தென்மாநிலங்களில் கட்சியை வளர்க்க தவெக திட்டமிட்டு வருகிறது. அதற்கான பணிகளிலும் ஈடுபட்டு வருகிறது.

இதனிடையே, பிரபல மலையாள நடிகர் தேவன். இவர் மலையாளத்தில் 80க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். தமிழில் பாட்ஷா, வாத்தியார், ஆதி, சிவகாசி போன்ற படங்களிலும் நடித்து புகழ்பெற்றுள்ளார்.

இதனிடையே, இவர் கேரளா மக்கள் கட்சி என்ற கட்சியை கடந்த 2024ம் தொடங்கினார். இதனை தொடர்ந்து அவர் பாஜகவில் இணைந்தார். அவருக்கு பாஜக மாநில துணைப்பொதுச்செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டது. கடந்த 2 ஆண்டுகளாக பாஜகவில் இருந்த தேவன் கடந்த 17ம் தேதி பதவியை ராஜினாமா செய்தார். மேலும், பாஜகவில் இருந்து விலகுவதாகவும் அறிவித்தார். கடினமான உழைத்தும் பாஜகவில் தனக்கு போதிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்று கூறி அவர் அக்கட்சியிலிருந்து விலகியுள்ளார். இந்நிலையில், பாஜகவில் இருந்து விலகிய நடிகர் தேவன் தவெகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. நடிகர் தேவன் வரும் 10ம் தேதி சென்னைக்கு வந்து முதல்–அமைச்சர் விஜய்–ஐ சந்தித்து தவெகவில் இணைய உள்ளார். அவருக்கு கேரளாவில் தவெக மாநிலத்தலைவர் பதவி வழங்கப்பட உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# கட்டுமான தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம்!




சென்னை, ஆக. 25–

கட்டுமான தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனம் பரிசீலனை செய்துவருகிறது.

‘இ.பி.எப்.ஓ. 3.0’ என்ற புதிய தளத்தின் ஒரு பகுதியாக, கட்டுமான தொழிலாளர்கள் நல வரி மூலம் திரட்டப்பட்ட உபரி நிதியை இதற்காக பயன்படுத்தத் திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த ஓய்வூதிய திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணிபுரிந்த கட்டுமான தொழிலாளர்களை பயனாளிகளாக சேர்க்க ஆலோசிக்கப்படுகிறது.

சமீபத்தில் நடந்த மத்திய அறங்காவலர் குழு கூட்டத்தில் இதுகுறித்து விவாதிக்கப்பட்டது. திட்டம் இறுதி செய்யப்பட்ட பிறகு, இறுதி முடிவுக்காக மீண்டும் அறங்காவலர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது. கட்டுமான பணிகளுக்கு விதிக்கப்படும் இந்த வரி, 1996–ம் ஆண்டு சட்டத்தின் கீழ் மாநில அரசுகளால் நிர்வகிக்கப்படுகிறது. இதன் பயன்பாடு கவலையளிக்கும் வகையில் இருந்ததால், இந்த நிதியை முறையாக பயன்படுத்த இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கடந்த 2024–ம் ஆண்டு ஜூன் மாத நிலவரப்படி, நாடு முழுவதும் 5.7 கோடி தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்திருக்கின்றனர். அதே ஆண்டு மார்ச் மாதம் வரை, இந்த வாரியங்கள் ரூ.1 லட்சத்து 12 ஆயிரம் கோடி வரியாக வசூலித்துள்ளன. இதில் ரூ.64 ஆயிரத்து 190 கோடி செலவிடப்பட்டு உள்ளது. வட்டி மற்றும் இதர வருவாய்கள் போக, ரூ.65 ஆயிரத்து 970 கோடி கையிருப்பில் உள்ளது.

கட்டுமான தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை செயல்படுத்த மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவது அவசியமாகும். மேலும், அவர்களுக்கு இ.எஸ்.ஐ. மருத்துவ காப்பீட்டு வசதிகளை வழங்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இதற்கான பங்களிப்பை கட்டுமான தொழிலாளர் நல நிதியிலிருந்து செலுத்தவும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. முறைசாரா துறையில் உள்ள தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக இந்தத் திட்டம் கருதப்படுகிறது.

# டெல்லியில் காவிரி மேலாண்மை ஆணைய கூட்டம்!

புதுடெல்லி, ஆக. 25–

காவிரி மேலாண்மை ஆணையத்தில் 54–வது கூட்டம் டெல்லியில் நடைபெற உள்ளது. ஆணைய தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் டெல்லியில் நடைபெறும் இந்த கூட்டத்தில் பங்கேற்க 4 மாநிலங்களின் அதிகாரிகளுக்கும் அழைப்பு விடுத்து உள்ளனர்.

இந்த கூட்டத்தில் 4 மாநில அதிகாரிகளும் நேரிலோ அல்லது காணொலி வாயிலாகவோ கலந்து கொள்வார்கள். கர்நாட காவில் இருந்து தண்ணீர் திறப்பது குறித்து தமிழக அதிகாரிகள், ஆணையத்திடன் வலியுறுத்த உள்ளனர்.

# வேலை வாய்ப்பு

## UPSC மூலம் 80 காலியிடங்கள்!




Union Public Service Commission (UPSC) சார்பில் Employees’ Provident Fund Organisation (EPFO) அமைப்பில் Assistant Provident Fund Commissioner பணியிடங்களுக்கு ஆட்சேர்ப்பு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

| வேலைவாய்ப்பு | விவரங்கள் |
|---|---|
| நிறுவனம்: | Union Public Service Commission (UPSC) |
| அறிவிப்பு எண்: | 52/2026 |
| பணி: | Assistant Provident Fund Commissioner |
| மொத்த காலியிடங்கள்: | 80 |
| பணியிடம்: | இந்தியா முழுவதும் |
| பணி வகை: | மத்திய அரசு பணி |
| பணிநியமனம்: | Regular Basis |
| விண்ணப்பிக்கும் முறை: | ஆன்லைன் |
| விண்ணப்பம் தொடங்கிய தேதி: | 22.08.2026 |
| விண்ணப்பிக்க கடைசி தேதி: | 11.09.2026 மாலை 6.00 மணி |

**முக்கிய அறிவுரை**

வயது வரம்பு, கல்வித் தகுதி, சம்பளம், தேர்வு முறை, விண்ணப்பக் கட்டணம் உள்ளிட்ட முழுமையான தகுதிகளை அதிகாரப்பூர்வ அறிவிப்பில் சரிபார்த்து விண்ணப்பிக்க வேண்டும்.

அதிகாரப்பூர்வ UPSC இணையதளம்: https://www.upsc.gov.in/

# திருப்பதி பக்தர்களுக்கு முக்கிய அறிவிப்பு!



திருப்பதி, ஆக. 25–

திருமலை திருப்பதி ஏழுமலையானை தரிசிக்க நவம்பர் மாதத்துக்கான ரூ.300 சிறப்பு நுழைவு தரிசன டிக்கெட்டுகள் ஆகஸ்ட் 25–ஆம் தேதி காலை 10 மணிக்கு ஆன்லைனில் வெளியிடப்பட்டது

மேலும், நவம்பர் மாதத்துக்கான திருமலை மற்றும் திருப்பதியில் தங்கும் அறைகளுக்கான முன்பதிவு ஆகஸ்ட் 25–ஆம் தேதி மாலை 3 மணிக்கு தொடங்கியது

முதியோர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நாள்பட்ட நோயாளிகளுக்கான இலவச சிறப்பு தரிசன டோக்கன்கள் ஆகஸ்ட் 24–ஆம் தேதி மாலை 3 மணிக்கு தொடங்கியது

பக்தர்கள் அதிகாரப்பூர்வ திருமலை திருப்பதி தேவஸ்தான இணையதளம் மூலம் மட்டுமே டிக்கெட் மற்றும் அறைகளை முன்பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# செப்.17-ல் கூடுகிறது டாடா சன்ஸ் வாரியம்!




புதுடெல்லி, ஆக. 25–

டாடா சன்ஸ் தலைவர் என். சந்திரசேகரன் ராஜினாமாவைத் தொடர்ந்து, வரும் செப்டம்பர் 17–ஆம் தேதி அந்நிறுவனத்தின் இயக்குநர்கள் குழு கூடவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கூட்டத்தில் சந்திரசேகரனின் ராஜினாமா, அடுத்த தலைவர் தேர்வு மற்றும் ஆண்டு பொதுக்குழு கூட்டம் உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த தலைவரைத் தேர்வு செய்ய 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட உள்ளது. டாடா குழுமத்தின் எதிர்கால நிர்வாகப் போக்கை தீர்மானிப்பதில் செப்.17 கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.


சந்திரசேகரனுக்கு மீண்டும் 5 ஆண்டுகள் பதவி நீட்டிப்பு வழங்குவது தொடர்பாக டாடா குழுமத்தின் உயர்மட்டத்தில் கருத்து வேறுபாடுகள் நிலவியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




# பஞ்சாப் தேர்தல்: பா.ஜ.க. தனித்து களம்!



பஞ்சாப், ஆக. 25–

"பஞ்சாப் மாற்றத்திற்கு முழுமையாகத் தயாராக உள்ளது, அதை நனவாக்க பா.ஜ.க.வும் முழுமையாக தயாராக இருக்கிறது. வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலில், பஞ்சாபில் உள்ள 117 சட்டமன்ற தொகுதிகளிலும் பா.ஜ.க. போட்டியிட்டு, வெற்றி பெற்ற பிறகு மாநிலத்தில் தனது ஆட்சியை அமைக்கும்," என்று பா.ஜ.க. தேசிய பொது செயலாளர் பி.எல். சந்தோஷ் கூறினார்.

பஞ்சாப் மாநிலத்திற்கு அவர் மேற்கொண்ட இரண்டு நாள் அமைப்பு பயணத்தின் முதல் நாளில், பாட்டியாலாவில் நடைபெற்ற முதல் மண்டலக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

நேற்று காலை மொஹாலி விமான நிலையத்தில் பி.எல். சந்தோஷை, மாநில பா.ஜ.க. தலைவர் சர்தார் கேவல் சிங் தில்லன் மற்றும் பஞ்சாப் இணை பொறுப்பாளர் சர்தார் நரேந்திர சிங் ரெய்னா ஆகியோர் வரவேற்றனர்.

தனது பயணத்தின் போது சந்தோஷ், பஞ்சாபின் பல்வேறு பிராந்தியங்களில் உள்ள பா.ஜ.க. தலைவர்கள் மற்றும் அமைப்பு பொறுப்பாளர்களுடன் மண்டல கூட்டங்கள் நடத்தி, அமைப்பின் செயல்பாடுகளையும் வரவிருக்கும் சட்டமன்ற தேர்தலுக்கான ஆயத்த பணிகளையும் ஆய்வு செய்வார்.

இந்தக் கூட்டங்கள், வாக்குச்சாவடி நிலை வரை அமைப்பை வலுப்படுத்துவதிலும், கட்சியின் கொள்கைகளையும் பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசின் சாதனைகளை பஞ்சாப் மக்களிடம் கொண்டு சேர்ப்பதிலும் குறிப்பாக கவனம் செலுத்தும்.

நேற்று சந்தோஷ் பாட்டியாலா மற்றும் பதிண்டாவில் நடைபெற்ற அமைப்புக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினார். லூதியானா, ஜலந்தர் மற்றும் அமிர்தசரஸில் மண்டல கூட்டங்கள் நடைபெறும்கின்றன. மாநில பொது செயலாளர்களுடன் தனியாக ஒரு கூட்டமும் அமிர்தசரஸில் நடைபெறும்.

"பா.ஜ.க. தனித்து போட்டியிட்டாலும் சரி, யாருடனாவது கூட்டணி அமைத்தாலும் சரி, பஞ்சாபில் அதனால் வெற்றி பெற முடியாது," என மாநில நிதியமைச்சர் ஹர்பால் சிங் சீமா தெரிவித்தார்.

"மார்ச் 2022–க்கு முன்பு, எங்கள் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவாலும், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மானும் ஐந்து வாக்குறுதிகளை அளித்தனர். அந்த ஐந்து வாக்குறுதிகளையும் நாங்கள் நான்கு ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி இருக்கிறோம்.

எனவே, பஞ்சாபில் ஆம் ஆத்மி கட்சியுடன் எந்த அரசியல் கட்சியும் போட்டியிட முடியாது. இது ஒரு நேரடி போட்டி, மேலும் 2022–ல் நாங்கள் அடைந்த செயல்திறனை விட சிறப்பாகச் செயல்படுவோம்," என்று அவர் மேலும் கூறினார்.

# ரஷிய வெளியுறவுத்துறை மந்திரியுடன் ஜெய்சங்கர் சந்திப்பு!



மாஸ்கோ, ஆக. 25–

மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கர் 2 நாட்கள் பயணமாக ரஷியா சென்றுள்ளார். அவர் நேற்று ரஷிய அதிபர் விளாடிமிர் புதினை சந்தித்தார்.

இந்நிலையில், ரஷிய வெளியுறவுத்துறை மந்திரி செர்கெய் லவ்ரோவை ஜெய்சங்கர் சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இருநாட்டு உறவு, வர்த்தகம், சர்வதேச அரசியல் சூழ்நிலை, உக்ரைன் போர் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருநாட்டு தலைவர்களும் ஆலோசனை நடத்தினர்.

பிரிக்ஸ் மாநாட்டில் பங்கேற்க ரஷிய அதிபர் புதின் அடுத்த மாதம் 12ம் தேதி இந்தியா வர உள்ளார். அந்த பயணம் தொடர்பாகவும் ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

# தேர்தல் வழக்கு: முதல்-அமைச்சர் விஜய் பதிலளிக்காவிட்டால் ரூ.50 ஆயிரம் அபராதம்!



சென்னை, ஆக. 25–

பெரம்பூர் தொகுதியில் முதல்–அமைச்சர் விஜய் வெற்றி பெற்றதை எதிர்த்து அந்தத் தொகுதியில் போட்டியிட்டு தோல்வி அடைந்த திமுக வேட்பாளர் ஆர்.டி.சேகர் சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்தார். அதே போல, வாக்காளர்கள் தினேஷ், லட்சுமி நரசிம்மன் ஆகியோரும் முதல்–அமைச்சர் விஜய்யின் வெற்றியை எதிர்த்து தேர்தல் வழக்கு தாக்கல் செய்தனர். இதைபோல திருச்சி கிழக்கு தொகுதியில் முதல்–அமைச்சர் விஜய் வெற்றியை செல்லாது என அறிவிக்கக் கோரி திமுக வேட்பாளர் இனிகோ இருதயராஜும் தேர்தல் வழக்கை தாக்கல் செய்தார். இந்த தேர்தல் வழக்குகள் அனைத்தும் நீதிபதி வி. லட்சுமிநாராயணன் அமர்வில் விசாரணையில் உள்ளன. இதுதொடர்பாக இந்திய தேர்தல் ஆணையம், முதல்–அமைச்சர் ஆகியோர் பதிலளிக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இந்த வழக்குகள் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்த நிலையில், முதல்–அமைச்சர் விஜய் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்படவில்லை. இதையடுத்து, அடுத்தமுறை விசாரணையின் போது முதல்–அமைச்சர் விஜய் தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என்று நீதிபதி வி. லட்சுமிநாராயணன் எச்சரிக்கை விடுத்தார். மேலும் "கடந்த முறையே வழக்குகளை நீராகரிக்கோரி மனு தாக்கல் செய்ய அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கூடுதல் அவகாசம் வழங்கப்படாது எனவும் ஆகஸ்ட் 27–க்குள் மனு தாக்கல் செய்யுங்கள் என்றும் 6 மாதங்களில் தேர்தல் வழக்கை முடிக்க வேண்டும் என்பது விதிமுறை என நீதிபதி தெரிவித்து வழக்கின் விசாரணையை ஒத்திவைத்தார்.

# அதிமுக எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா விவகாரம்: சட்டசபையில் காரசார விவாதம்!



சென்னை, ஆக. 25–

பொறுப்பு அமைச்சரால் காலியாக உள்ள அனைத்து தொகுதிகளுக்கும் செல்ல முடியுமா? என இபிஎஸ் கேள்வி எழுப்பினார். அப்போது பேசிய அமைச்சர் செங்கோட்டையன், காலியாக உள்ள தொகுதிகளில் விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

எடப்பாடி தொகுதியில் தவெக வேட்பாளர் வாபஸ் பெற்றது குதிரை பேரம் இல்லையா? என அமைச்சர் செங்கோட்டையன் ஆவேசமாகக் கேட்டார்.

**எடப்பாடி ஆவேசம்**

எடப்பாடி தவெக வேட்பாளர் வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என எடப்பாடி பழனிசாமி ஆவேசமாக பதிலளித்தார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், எடப்பாடி பழனிசாமி உணர்ச்சிவசப்படாமல் நிதானமாக பேச வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

ஒரு மாதத்தில் 6 பேர் ராஜினாமா செய்துள்ளனர். ஆதாயம் இன்றி ராஜினாமா செய்வார்களா? என ஆஸ்டின் கேள்வி எழுப்பினார்.

இடைத்தேர்தல் நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணையம்தான் முடிவெடுக்க முடியும். நாம் முடிவு செய்ய முடியாது என்றார் சபாநாயகர்.

6 தொகுதிகளில் எம்எல்ஏக்கள் இல்லாத நிலையில் மக்கள் தங்களது பிரச்சனைகளை யாரிடம் கூறுவது என எம்எல்ஏ ஆஸ்டின் கேள்வி எழுப்பினார்.

மக்கள் பிரச்சனைகளைக் கேட்டு நிறைவேற்றவதற்காக 6 தொகுதிகளுக்கும் பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அமைச்சர் ஆதவ் தெரிவித்தார்.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா விவகாரம் தொடர்பாக தமிழக சட்டசபையில் எடப்பாடி பழனிசாமி மற்றும் செங்கோட்டையன் இடையே கடும் வாக்குவாதம் உருவானதால் சிறிது பரபரப்பு ஏற்பட்டது.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா விவகாரம் தமிழக சட்டசபையில் காரசார விவாதத்தை ஏற்படுத்தியது.

தமிழக சட்டசபையில் மானிய கோரிக்கை மீதான விவாதம் நடைபெற்று வருகிறது.

**ஆஸ்டின் கேள்வி**

இதில் பேசிய திமுக உறுப்பினர் ஆஸ்டின் பேசுகையில், பட்ஜெட் கூட்டத்தில் உதயநிதி பங்கேற்பதை தடுக்க சதி நடந்தது. சதியை முறியடித்து அவையில் வீற்றிருக்கிறார் உதயநிதி. சிறுபான்மை ஆணைய தலைவர் பெலிக்ஸ் ஜெரால்டு தொலைக்காட்சி அரசியல் விவாதங்களில் பங்கேற்கக் கூடாது என தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் நிர்மல்குமார், சிறுபான்மை ஆணைய தலைவர் தனிப்பட்ட விவாதம். பொதுமேடையில் பேசவே கூடாது என்றெல்லாம் கிடையாது. கடந்த ஆட்சியில் பீட்டர் அல்போன்ஸ், லியோனி போன்றவர்கள் அரசியல் விவாதங்களில் பேசி உள்ளனர் என்றார்.

அப்போது எழுந்த உறுப்பினர் தளவாய் சுந்தரம், திமுக எம்எல்ஏ ஆஸ்டின் பல கட்சிகளில் இருந்தவர் என பேசினார். இதற்கு திமுகவினர் எதிர்ப்பு தெரிவித்து கடும் அமளியில் ஈடுபட்டனர்.

எம்.எல்.ஏ. ஆஸ்டின் பேசியபோது அமைச்சர் பேசலாம், அவை முன்னவர் பேசலாம் தளவாய் சுந்தரம் ஏன் பேசுகிறார்? என கேளன். நேரு கேள்வி எழுப்பினார்.

விளக்கம் கூற வருகிறார் என நினைத்து தான் தளவாய் சுந்தரம் பேச அனுமதித்தேன் என்றார் சபாநாயகர் விளக்கம் அளித்தார்.

அதிமுக எம்.எல்.ஏ. எடப்பாடி பழனிசாமி பேசுகையில், எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா காரணமாக காலியாக உள்ள தொகுதிகளில் யார் மக்கள் பணி செய்வது? என கேள்வி எழுப்பினார்.

**செங்கோட்டையன் பதில்**

அதற்கு பதிலளித்த அமைச்சர் செங்கோட்டையன், எம்.எல்.ஏ. இல்லாமல் காலியாக உள்ள தொகுதிகளில் பொறுப்பு அமைச்சர்கள் கவனித்து வருகின்றனர் என்றார்.

பொறுப்பு அமைச்சரால் காலியாக உள்ள அனைத்து தொகுதிகளுக்கும் செல்ல முடியுமா? என இபிஎஸ் கேள்வி எழுப்பினார். அப்போது பேசிய அமைச்சர் செங்கோட்டையன், காலியாக உள்ள தொகுதிகளில் விரைவில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார். எடப்பாடி தொகுதியில் தவெக வேட்பாளர் வாபஸ் பெற்றது குதிரை பேரம் இல்லையா? என அமைச்சர் செங்கோட்டையன் ஆவேசமாகக் கேட்டார்.

**எடப்பாடி ஆவேசம்**

எடப்பாடி தவெக வேட்பாளர் வேட்பு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என எடப்பாடி பழனிசாமி ஆவேசமாக பதிலளித்தார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய சபாநாயகர் ஜேசிடி பிரபாகர், எடப்பாடி பழனிசாமி உணர்ச்சிவசப்படாமல் நிதானமாக பேச வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

ஒரு மாதத்தில் 6 பேர் ராஜினாமா செய்துள்ளனர். ஆதாயம் இன்றி ராஜினாமா செய்வார்களா? என ஆஸ்டின் கேள்வி எழுப்பினார்.

இடைத்தேர்தல் நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணையம்தான் முடிவெடுக்க முடியும். நாம் முடிவு செய்ய முடியாது என்றார் சபாநாயகர்.

6 தொகுதிகளில் எம்எல்ஏக்கள் இல்லாத நிலையில் மக்கள் தங்களது பிரச்சனைகளை யாரிடம் கூறுவது என எம்எல்ஏ ஆஸ்டின் கேள்வி எழுப்பினார்.

மக்கள் பிரச்சனைகளைக் கேட்டு நிறைவேற்றுவதற்காக 6 தொகுதிகளுக்கும் பொறுப்பு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் என அமைச்சர் ஆதவ் தெரிவித்தார்.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா விவகாரம் தொடர்பாக தமிழக சட்டசபையில் எடப்பாடி பழனிசாமி மற்றும் செங்கோட்டையன் இடையே கடும் வாக்குவாதம் உருவானதால் சிறிது பரபரப்பு ஏற்பட்டது.

# வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம்!




புதுடெல்லி, ஆக. 25–

வாரம் 5 நாட்கள் பணியை அமல்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலுயுறுத்தி, செப்டம்பர் 11–ந் தேதி வேலைநிறுத்தத்தில் ஈடுபட வங்கி ஊழியர்கள் முடிவு செய்துள்ளனர்.

9 வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் சங்கங்கள் இணைந்த உயரிய அமைப்பு, ஐக்கிய வங்கி சங்கங்கள் கூட்டமைப்பின் கூட்டம் நடந்தது. அதில், வங்கி ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பாக மத்திய அரசு எதிர்மறை அணுகு முறையை பின்பற்றுவதாகவும். அதனால் செப்டம்பர் 11–ந் தேதி நாடுதழுவிய வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதுகுறித்து ஐக்கிய வங்கி சங்கங்கள் கூட்டமைப்பு வெளி யிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்ப தாவது:– வாரத்துக்கு 5 நாட்கள் வேலை என்ற கோரிக்கையை கடந்த 2024–ம் ஆண்டு மார்ச் 8–ந் தேதி நடந்த இருதரப்பு கூட்டத் தில் இந்திய வங்கிகள் சங்கம் ஏற்றுக்கொண்டது. அதற்கு பதிலாக திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை நாள்தோறும் பணிநேரத்தை 40 நிமிடங்கள் அதிகரிக்கவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. மத்திய அரசுக்கும் பரிந்துரை அனுப்பியது. ஆனால் 2 ஆண்டுகளாக மத்திய அரசு எந்த முடிவும் எடுக்காமல் நிலுவையில் வைத்துள்ளது.

மேலும், 4–ம் நிலை மற்றும் அதற்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கான செயல்திறன் அடிப்படையிலான ஊக்கத்தொகை திட்டம் எங்களுக்கு ஏற்படையது அல்ல. இது, ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்வுக்கு எதிரானது. இவை உள்பட நிலுவையில் உள்ள கோரிக்கைகளை வலியுறுத்தி, செப்டம்பர் 11–ந் தேதி நாடுதழுவிய வேலைநிறுத்தம் நடத்த முடிவு செய்துள்ளோம்.

அதன்பிறகும் கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால், செப்டம்பர் 28–ந் தேதியில் இருந்து 3 நாட்கள் தொடர் வேலைநிறுத்தத் தில் ஈடுபடுவோம். அக்டோபர் 26–ந் தேதியில் இருந்து காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

செப்டம்பர் 12 மற்றும் 13–ந் தேதி, இரண்டாவது சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை, வங்கிகளுக்கு விடுமுறை ஆகும். 14–ந் தேதி, விநாயகர் சதுர்த்திக்காக விடுமுறை ஆகும். எனவே, செப்டம்பர் 11–ந் தேதி வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம் நடந்தால், தொடர்ந்து 4 நாட்கள் வங்கிச் சேவைகள் பாதிக்கப்படும்.

# ஹைதி: ஆயுதக்குழுவினர் இடையே மோதல் - 42 பேர் பலி!



போர்ட்–ஓ–பிரின்ஸ், ஆக. 25–

கரீபியன் தீவு நாடான ஹைதியில் கடந்த 2021–ம் ஆண்டு அதிபர் ஜோவெனல் மொய்ஸ் படுகொலை செய்யப்பட்டார். இதையடுத்து, அந்நாட்டில் அரசியல் நிலைத்தன்மையின்றி ஆயுத கும்பல்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

ஆயுத கும்பல்களின் வன்முறை பல மடங்கு அதிகரித்துள்ளது. மேலும் தலைநகர் போர்ட்–ஓ–பிரின்ஸ் உள்ளிட்ட பல இடங்களை ஆயுத கும்பல்கள் தங்களது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளன. அதே வேளை, ஆயுதக்குழுவினர் இடையே அவ்வப்போது மோதல் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில், தலைநகர் போர்ட்–ஓ–பிரின்சில் இருந்து 10 கிலோமீட்டர் தொலைவில் உள்ள கெண்ட்ஸ்கப் நகரில் ஆயுதக்குழுவினர் இடையே நேற்று இரவு மோதல் ஏற்பட்டது. துப்பாக்கி சூடு, கத்தி உள்ளிட்ட ஆயுதங்களால் இரு தரப்பும் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொண்டனர்.

இரு ஆயுதக்குழுவினர் இடையே நடந்த இந்த மோதலில் 42 பேர் உயிரிழந்தனர். மேலும், பலர் படுகாயமடைந்தனர். இந்த மோதல் குறித்து தகவலறிந்த பாதுகாப்புப்படையினர் அப்பகுதியில் பாதுகாப்பை அதிகரித்துள்ளனர்.



மதுரை மாநகராட்சி, மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்தில் ஆணையாளர் திரு.கௌரவ் குமார் அப்பகுதியில் உள்ள கடைகள் மற்றும் உணவு நிறுவனங்கள் பொது மக்களுக்கும், பாதசாரிகளுக்கும் இடையூறு ஏற்படுத்திடும் வகையில் ஆக்கிரமிப்பு செய்துள்ளதை பார்வையிட்டு, ஆக்கிரமிப்புகளை உடனடியாக அகற்றிடுமாறு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

# சற்று குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஆக. 25–

தங்கம் விலை உயரும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சற்று குறைந்துள்ளது. கிராமுக்கு 20 ரூபாய் குறைந்து ஒரு கிராம் ரூ.15 ஆயிரத்து 10–க்கும் சவரனுக்கு 160 ரூபாய் குறைந்து ஒரு சவரன் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 80 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

தங்கத்தை போலவே வெள்ளியின் விலையும் குறைந்துள்ளது. அந்த வகையில், இன்று வெள்ளி கிராமுக்கு 10 ரூபாய் குறைந்து ஒரு கிராம் வெள்ளி 265 ரூபாய்க்கும் பார் வெள்ளி 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020